**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2004-05 & thereafter)**

**SUBJECT CODE : TM/FC/SI43**

**B.A / B.Sc./ BSW. DEGREE EXAMINATION, APRIL 2008**
**FOUNDATION COURSE – TAMIL**
**FOURTH SEMESTER**

| | | |
|---|---|---|
| **COURSE** | **:** | **FOUNDATION – CORE** |
| **PAPER** | **:** | **SANGA KALA ILAKKIYAM** |
| **TIME** | **:** | **3 HOURS** |

**MAX. MARKS : 100**

பகுதி - அ

I. ஓரிரு வாக்கியங்களில் விடை எழுதுக. (10 X 1 = 10)

1. சிறுவெள்ளாங்குருகிடம் தலைவி கூறியது யாது?
2. செலவு அழுங்கல் என்றால் என்ன?
3. வருந்தாது ஏகுமதி வாலெயிற்றோயே என்று தலைவன் கூறியது யாது?
4. 'செம்புலப் பெயல் நீர்' உவமைச் சிறப்பைக் கூறுக.
5. அஞ்சிறைத் தும்பியை அழைத்தது யார்?
6. பரிசிலர் பெற்ற ஊரின் எண்ணிக்கையைக் கூறுக.
7. தீதும் நன்றும் பிறர் தரவ ாரா – பொருள் கூறுக.
8. நட்பிற்கு வீற்றிருக்கை யாது?
9. சோர்விலாள் பெண் - என்று வள்ளுவர் கூறுவன யவை?
10. உடைமையில் இன்மை யாது?

II. எவையேனும் நான்கனுக்கு இடம் சுட்டி விளக்கம் தருக (4 X 3 = 12)

11. அகவன் மகளே அகவன்மகளே
12. வென்றெறி முரசின் வேந்தர் எம்
    குன்றும் கொண்டார்
13. நாடி நட்பின் அல்லது
    நட்டு நாடார்
14. மங்கலம் என்ப மனைமாட்சி
15. ஆறும் உடையான் உடையாள் அரசருள் ஏறு

III. திணை – துறை விளக்கம் தருக.

(2 X 4 = 8)

16. முல்லை அல்லது பாலை

17. வாழ்த்தியல் அல்லது கையறுநிலை

IV. எவையேனும் ஐந்தனுக்கு விடைதருக.

(5 X 9 = 45)

18. நற்றிணையில் அமைந்த வெள்ளிவீதியார் பாடலின் சிறப்பினை விளக்குக.

19. குறுந்தொகையில் தலைவன் கூற்றாக அமையும் பாடல்களில் இரண்டின் சிறப்பினைப் புலப்படுத்துக

20. பிசிராந்தையார் பாடலில் பொதிந்துள்ள கருத்துச் சிறப்பினைப் புலப்படுத்துக.

21. விருந்தோம்பல் அதிகாரத்தில் காணப்படும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

22. கணியன் பூங்குன்றனின் பாடற்சிறப்பை விளக்குக.

23. எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு பெறும் இடத்தைப் புலப்படுத்துக.

24. சங்க இலக்கியங்களின் சால்புகளைத் தொகுத்துரைக்க

V. கட்டுரை வரைக

(1 X 15 = 15)

25. நவநீதாவின் பண்புநலன்களை விளக்குக.

அல்லது

கிராம ராஜ்யம் - சமூக விழிப்புணர்வு நாடகம் என்பதை நிறுவுக.

VI. கடிதம் எழுதுக. (அலுவலகக்கடிதம்).

(1 X 10 = 10)

26. உங்கள் பகுதியில் இருக்கும் மாநகராட்சிப் பூங்காவினைச் சரிவர பராமரிக்கக் கோரி மாநகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உங்கள் பகுதியில் மாவட்ட நூலகம் கிளை ஒன்றை அமைக்கக் கோரி மாவட்ட நூலக ஆணையர் குழுத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

*********** ************** ****************

**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2007-08 & thereafter)**

**SUBJECT CODE : TM/FC/T123**

**B.A / B.Sc./ BSW/B.Com/B.C.A. DEGREE EXAMINATION, APRIL 2008**
**FOUNDATION COURSE – TAMIL**
**SECOND SEMESTER**

**COURSE : FOUNDATION – CORE**
**PAPER : THARKKALA ILAKKIYAM**
**TIME : 3 HOURS**

**MAX. MARKS : 100**

பிரிவு - அ

I. அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தருக.

(12 X 1 = 12)

1. பாஷை - பொருள் தருக.
2. எதைக் கூற அஞ்சுவாய் என்கிறார் பாரதியார்?
3. மதி – பொருள் தருக.
4. பாரதியார் எதை தாரகம் என்று கூறுகிறார்?
5. கொலைக்களத்தில் பேசியவன் பெயரென்ன?
6. எதை உயிர் என்று போற்றுமின்கள் என்கிறார் பாரதிதாசன்?
7. தந்தையென யாரை வணங்க வேண்டும்?
8. ஓதலினும் மிகச் சிறந்தது எது?
9. எழுந்து நடப்பவனுக்குத் திரும்பும் திசையெல்லாம் எத்திசை என்கிறார்?
10. ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிற்பது எது?
11. காவிரி நகரினில் ஆட வந்தவள் யார்?
12. பெண்களை மட்டும் காவலில் வைப்பது எது?

II. எவையேனும் நான்கனுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

(4 X 4 = 16)

1. கண்ணிரண்டும் விற்றுமச் சித்திரம் வாங்கினால்
   கைகொட்டிச் சிரியாரோ.
2. இருவர் இதோ சாகின்றோம் நாளை நீங்கள்
   இருப்பது மெய் என்றெண்ணி இருக்கின்றீர்கள்

3. சிற்றாசை களிற் களித்துச் சீர்கெடாமல்
   சிந்தனையைக் கல்விக்கே செலுத்த வேண்டும்
4. செம்பு கொண்ட தங்கமென்ன
   சேர்ந்த தீமை மாற்றுவார்
5. அன்பால் உயிர்கள் அணைந்திருத்தல் கண்டாலே
   இன்பாம் பொதுமை எழும்
6. வாழையடி வாழை ஒன்று ஜனனம் அது
   வந்தவுடன் தாய் விழுந்து மரணம்.

பிரிவு - ஆ

(4 X 8 = 32)

III. <u>கீழ்க் கண்டவற்றுள் எவையேனும் நான்கனுக்கு விடை எழுதுக.</u>

1. சுதந்திரப் பெருமை குறித்து பாரதியார் கூறும் கருத்துக்களை விளக்குக.?
2. உதாரன் சனங்களிடையே முழங்கிய முழக்கத்தைப் புலப்படுத்துக.?
3. நாமக்கல் கவிஞர் மாணவனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?
4. இயேசுவின் தன்மைகளாகத் திரு.வி.க. கூறுவன யாவை?
5. கவிஞர் கவிதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.?
6. பாரதிதாசன் (அல்லது) கண்ணதாசன் குறித்து இலக்கிய வரலாற்றுக் கட்டுரை வரைக.

பிரிவு - இ

IV. <u>கீழ்காணும் சிறுகதைகளுக்கு இரண்டினைச் சமூகக் கண்ணோட்டத்துடன் விவரிக்க</u>

(2 X 10 = 20)

உறவின் பரிணாமம் (அல்லது) சத்தியம்

மோதிரக்கனவு (அல்லது) புதுத்தாய்

V. <u>தமிழில் மொழிபெயர்க்க</u>

(1 X 10 = 10)

An American scientist by name of Alexander Gram. Bell invented the telephone. It has proved to be an extremely useful invention. It is hardly considered a luxury today. Infact, it is now a necessity. In big cities and town. More and more people now have telephone.

For those who still do not own phone, there are public telephone. These have been set up in public places. Each telephone has a receiver, a transmitter and a dial. Telephone exchanges work as connecting stations between two phones.

Nowadays, Mobile phones are extremely popular. Unlike the phones at home, one can carry these in one's pocket.

VI. பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்துக.

(5 X 1 = 5)

தமிழ் புத்தாண்டு என்பதற்கான சட்டம் நிறைவேறுவதற்கு சட்டபேரவையிலே அறிமுகம் செய்யபட்டிருக்கிறது. தமிழ் புத்தாண்டு தை மாதம் முதல் நால் தான் என்று சொண்ணவர் நம்பி ஆரூரானின் பாட்டணார் மறைமளை அடிகள் தான்.

VII. பின் வரும் அறிவியல் சொற்களுக்குக் கலைச் சொல்லாக்கம் தருக

(5 X 1 = 5)

Atom, Dehydration, Computer, Allergy, Chemistry

*********** ********** ****************